**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 409/2024**
**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. முகமது இப்ராகிம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முகமது காசிம்** | **Calling** | : | **டீ மாஸ்டர்** |
| **Village** | : | **MM கோவிலூர்** | **Religion** | : | **முஸ்லீம்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **39** |
| | | | **Dated** | : | **24.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 2), **திரு. முகமது இப்ராகிம்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :—</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டீ மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். 14.12.2023 ம் தேதி பகல் 12.45 மணிக்கு எனது கடைக்கு எதிரே கூட்டமாக இருந்தது. சத்தம் கேட்டு நான் என்ன என்று போய் பார்த்தேன். எங்கள் கடைக்கு டீ சாப்பிட வரும் ஒரு பெரியவர் விழுந்து கிடந்தார். நெற்றியின் வலது பக்கம் காயம் ஏற்பட்டு இரத்தக்காயத்தோடு இருந்தார். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு ஏற்றிவிட்டோம். அவர்மீது மோதிய FZ இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்து அடிபட்டு ஆஜர் எதிரியும் அழுது கொண்டு இருந்தார்.

அவரை நான் தூக்கிவிட்டேன். வேறு விபரங்கள் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

விபத்து யாருடைய கவனக்குறைவினால் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான், நான் சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லை.

Taken down by me/before me in open court on **24.03.2026** and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.24 14:53:12 +0530

**Chief Judicial Magistrate,**

**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 409/2024**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. வெள்ளையன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சின்னக் கவுண்டர்** | **Calling** | : | **சிப்ஸ் கடை தள்ளுவண்டி** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **49** |
| | | | **Dated** | : | **24.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 4), **திரு. வெள்ளையன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சிப்ஸ் கடை தள்ளுவண்டி வைத்து வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக பகல் 12.30 மணிக்கு மேல் சத்தம் கேட்டு நான் வேலை பார்த்துக் கொண்டிருந்து எனது சிப்ஸ் கடையில் இருந்து ஓடிப்போய் பார்த்தேன். அங்கு ஒரு பெரியவர் அடிபட்டுக் கிடந்தார். பக்கத்தில் போய் பார்த்த போது தான் விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தைப் பார்த்தேன். அங்கு கூட்டமாக இருந்தது. பெரியவர் இரத்தத்தோடு கிடந்தார்.

அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு ஏற்றிவிட்டோம். அவர் மீது மோதிய இருசக்கர வாகனத்தை காம்பவுண்டு சுவர் ஓரமாக எடுத்து நிறுத்திக் கொண்டு இருந்தார்கள். ஆஜர் எதிரியை அங்கு இருந்தவர்கள் சத்தம் போட்டுக் கொண்டு இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

விபத்து யாருடைய கவனக்குறைவினால் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல, இருசக்கர வாகனம் தான் காரணம். நான் சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரிதான், இடித்தபிறகுதான் நான் சென்று பார்த்தேன். சம்பவ இடம் கூட்ட நெரிசல் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். அந்த இடத்தில் வாகனத்தை வேகமாக ஓட்ட முடியாது என்றால், மதிய நேரத்தில் கூட்டம் அதிகமாக இருக்காது. எனது கடைக்கும், சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 200 மீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். என் கடையில் இருந்து சம்பவ இடத்தை துல்லியமாக பார்க்க முடியாது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on **24.03.2026** and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.24 14:53:22 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**